(வணிகவரிகள்)
03 MAY 2024

(மாநில வரி) அலுவலகம்.
16 MAY 2024

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – ஈரோடு கோட்டம் – திருமதி.ஆர்.தமயந்தி என்பவர் கருணையடிப்படையில் 23.01.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண். 120

நாள்: 17.04.2024
குரோதி, சித்திரை–04,
திருவள்ளுவர் ஆண்டு, 2055

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. ஈரோடு கோட்ட இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகள் ந.க. எண்.14767/2022/அ3, நாள் 19.01.2023.
3. வணிகவரி ஆணையரின் கடித எண்.ஓய்–3/5374938/2023, நாள் 15.03.2024.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (மா.வ), நேதாஜி சாலை சரகம், ஈரோடு அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிகையில், 15.08.2022 அன்று பணியிடை மரணமடைந்த திரு.து.மருதாச்சலம் என்பவரின் மனைவி திருமதி. ஆர்.தமயந்தி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 23.11.2022 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி. ஆர்.தமயந்தி என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற தகுதியானவர் எனவும், மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி சீர்தூய்வு செய்யப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஈரோடு கோட்ட இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகளில் திருமதி. ஆர்.தமயந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 23.01.2023 முற்பகல் முதல் இணை ஆணையர் (மா.வ), பவானி வரி விதிப்பு வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 23.01.2023 முற்பகல் முதல் அவரது பணியினை

(த.பி.பா)

இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. வணிகவரி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (மா.வ), நேதாஜி சாலை சரகம், ஈரோடு அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிகையில், 15.08.2022 அன்று பணியிடை மரணமடைந்த திரு.து.மருதாச்சலம் என்பவரின் மனைவி திருமதி. ஆர்.தமயந்தி என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (மா.வ), பவானி வரி விதிப்பு வட்ட அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை தனியர் பணியில் சேர்ந்த நாளான 23.01.2023 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி. ஜெகந்நாதன்
அரசு செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்:

திருமதி. ஆர்.தமயந்தி, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் (மா.வ) , ஈரோடு.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
வணிகவரி ஆணையர், சென்னை–5. (இணைப்புடன்)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
✓சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

நகல்:

இணை ஆணையர் (மா.வ), கோவை கோட்டம்.
(வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை – 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை. சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண்: 1768/2022/ஆ2.

(டி.கே.ஜெய சோபா)
அரசு சார்புச் செயலாளர்

சான்று செய்யப்பட்டது.

உதவி ஆணையர் (மாநிலவரி) அலுவலகம்
பவானி.
நாள்: 03.06.2024

பெறுநர்:
திருமதி.ஆர்.தமயந்தி,
இ.உ., இளநிலை உதவியாளர்,
பவானி வரிவிதிப்பு வட்டம்

உதவி ஆணையர் (மா.வ) (மு.கூ.பொ)
பவானி வரி விதிப்பு வட்டம்,